

புதுடெல்லியில் நேற்று முன்தினம் (25.11.2024) பாரத பிரதமர் அவர்கள் துவக்கி வைத்த ஐக்கிய நாடுகளின் பிரகடனம் சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025 விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டார்கள். உடன் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். ஜெ.ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.ந.சுப்பையன் ஆகியோர் உள்ளனர்.

# தமிழ்நாட்டில் அதிக மழை வந்தாலும் எதிர்கொள்ள அரசு தயார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, நவ. 27-

தமிழகத்தில் அதிக மழை வந்தாலும் அதை எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று சென்னை, சோழிங்கநல்லூர் கண்ணகி நகரில் நடைபெற்ற விழாவில் பங்கேற்றார். நிகழ்ச்சி முடிந்ததும் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுப் பெற்றிருக்கிறது. இதனுடைய நகர்வு தமிழ்நாட்டை நோக்கி வரும் என்று சொல்லி உள்ளார்கள்.

குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் அதிக மழையை எதிர்பார்க்கிறோமா? என்ன மாதிரி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? எதிர்பார்க்கிறோம் என்பது வேறு. ஆனால், எல்லாவற்றுக்கும் அரசு தயாராக இருக்கிறது. அனைத்து மாவட்ட ஆட்சியரும் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மண்டலம் வாரியாக தயார் நிலையில் அதிகாரிகள் உள்ளனர். நாடாளுமன்ற கூட்டத்தில் தமிழகத்திற்கான நிதி மற்றும் உதவிகள் கிடைப்பது குறித்து எம்.பி.க்கள் என்ன நடவடிக்கை எடுப்பார்கள்?

ஏற்கனவே தமிழக எம்.பி.க்களை அழைத்து என்னென்ன பேசினோம். அந்த கூட்டத்தில் எடுத்த முடிவு குறித்து தீர்மானமாக கொடுத்திருக்கிறோம். அதை வலி யுறுத்தி நாடாளுமன்றத்தில் தமிழக எம்.பி.க்கள் பேசுவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

### அரசியலமைப்பின் முகவுரையில்

# மதச்சார்பற்ற, சமத்துவம் என்ற வார்த்தைகளை நீக்க முடியாது!

## உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

புதுடெல்லி, நவ. 27-

'அரசியலமைப்பு முகவுரையில் இருக்கும் மதச்சார்பற்ற மற்றும் சமத்துவம் ஆகிய வார்த்தைகளை நீக்கம் செய்ய முடியாது' என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அரசியலமைப்பு முகவுரையில் இருக்கும் செக்கியூலர்(மதசார்பற்ற) மற்றும் சோசியலிஸ்ட்(சமத்துவம்) ஆகிய வார்த்தைகளை அகற்றக்கோரி சுப்பிரமணியசாமி மற்றும் வழக்கறிஞர் அஸ்வினி உபாத்யாய் உள்ளிட்டோர் உச்ச நீதிமன்றத்தில் பொது நல மனுக்களை தனித்தனியாக தாக்கல் செய்திருந்தனர். அதில், "42வது அரசியல் சட்டத்திருத்தம் மூலம் தான் மேற்கண்ட இரண்டு வார்த்தைகளும் அரசியலமைப்பின் முகவுரையில் சேர்க்கப்பட்டது. அதனை நீக்கம் செய்ய வேண்டும்" என்று தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி, "சோசியலிசம் என்ற வார்த்தை அனைவருக்குமான நியாயமான வாய்ப்பு என்று கூட பொருள் ஆகும். அது சமத்துவத்தையும் குறிக்கிறது. அரசியல் சாசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் என்ற சொற்கள் மற்றும் பகுதி 3ன் கீழ் உள்ள உரிமைகளை ஒருவர் சரியாகப் பார்த்தால், மதச்சார்பின்மை அரசியலமைப்பின் முக்கிய அம்சமாக கருதப்பட்டது என்பது தெளிவாக தெரிகிறது" என்று கூறி தீர்ப்பை நேற்றைக்கு ஒத்திவைத்து கடந்த 21ம் தேதி உத்தரவிட்டிருந்தனர். இந்த நிலையில் மேற்கண்ட விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா தலைமையிலான அமர்வு நேற்று முன்தினம் வழங்கிய தீர்ப்பில், "குறிப்பாக பல்வேறு சிறப்பு அம்சங்களை கருத்தில் கொண்டே அரசியல் சாசன முகவுரையில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனவே அரசியலமைப்பு முகவுரையில் இருக்கும் செக்கியூலர் மற்றும் சோசியலிசம் ஆகிய வார்த்தைகளை நீக்கம் செய்ய முடியாது" என்று உத்தரவிட்டு மனுவை தள்ளுபடி செய்தனர்.

### பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் மாநிலங்களில்

# இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னிலையில் இருக்கிறது!

## அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

சென்னை, நவ. 27-

இந்தியாவிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் மாநிலங்களில் தமிழ்நாடு முன்னிலையில் இருக்கிறது என சமூக நலம்மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

பெண்களுக்கான உரிமைகளைக் காப்பது போலவே அவர்களது கண்ணியத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதில் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு உறுதியாக இருக்கிறது.

பெண்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் தங்களுடைய பணிகளை மேற்கொள்வதற்கான சூழல் தமிழ்நாட்டில் நிலவுவதால்தான் தமிழ்நாட்டில் பெண்கள் மிக அதிக அளவில் கல்வி கற்கிறவர்களாகவும், வேலைக்குச் செல்பவர்களாகவும், சுயமானவர்களா கவும் உள்ளனர். இந்தியாவில் உற்பத்தித்துறையில் உள்ள பெண்களில் கிட்டத்தட்ட பாதிப்பேர் அதாவது 43% பேர் தமிழ்நாட்டில் பணியாற்றுகிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் 1973 ஆம் ஆண்டுப் பெண்களை முதன் முதலாகக் காவல் துறையில் இணைத் தார். முதலமைச்ச ராகத் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றவுடன் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அனைத்து உட்கோட்டங்களிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற வகையில் புதிதாகக் காவல்நிலையங்களைத் திறந்து வருகிறார்.

தமிழ்நாட்டில் மொத்தம் 241 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 32 ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவுகள், 7 புலன் விசாரணைப் பிரிவுகள், 43 குழந்தை கடத்தல் தடுப்புப் பிரிவுகள் மற்றும் 39 சிறப்பு இளஞ்சிறார் காவல் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. சிறார்களுக்கு எதிரான குற்றங்களைக் கையாள்வதற்கு மாநிலத்தில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங் களில் 194 சிறார் நட்பு அறைகள் மற்றும் 1,542 குழந்தைகள் நல காவல் அலுவலர்களும் செயல்பட்டு வருகின்றனர்.



மாநில அளவில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் பொருட்டுத் தடுப்புப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு, அப்பிரிவு ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது. அதேபோல 'ப்ராஜக்ட் பள்ளிக்கூடம்' திட்டம், 'இமைகள் திட்டம்' ஆகியவற்றின் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு மற்றும் விரைவான நீதி கிடைக்க அரசு செயலாற்றி வருகிறது.

மேலும் பெண்களுக்கு உதவும் வகையில் அவர்கள் விரைவாகத் தங்களது புகார்களை விரைவாகப் பதிவு செய்ய 'காவல் உதவி' செயலி முதலமைச்சரால் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. அதே போல பெண்கள் உதவி மைய எண் 181, மற்றும் குழந்தை களுக்கான உதவி மைய எண் 1098 ஆகியவை மிகச்சிறப்பாக செயல்பாட்டில் உள்ளன. இவற்றின் மூலமும் பதிவு செய்யப்படும் குற்றங்கள் உடனடியாக விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பள்ளிக் குழந்தை களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமூக நலத்துறை, பள்ளிக் கல்வித்துறை, காவல் துறை ஆகிய மூன்று துறைகளும் தொடர்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைத் நடத்தி வருகின்றன.

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் இறுதியாக 2022 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையின்படி பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை நாடுமுழுமைக்கும் இலட்சத்துக்கு 65 என்றால் தமிழ்நாட்டில் 24 என்ற அளவில் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது. பாலியல் வன்புணர்வு வழக்குகளின் தேசிய சராசரி 4.6 என்ற அளவிலும் தமிழ்நாட்டில் 0.7 அளவிலும் உள்ளது.

பெண்களின் சமூக வாழ்வை உயர்த்துவதற்கான 'விடியல் பயணம்', 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' போன்ற நாட்டிற்கே முன்னோடியான திட்டங்களைச் செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிரான குற்றங்களைத் தடுப்பதை அரசின் முக்கிய நோக்கமாகக் கொண்டு செயலாற்றுகிறது திராவிட மாடல் அரசு.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான எத்தகைய வன்முறையையும் இந்த அரசு சகித்துக் கொள்ளாது. மிகுந்த கண்காணிப்புடன் உறுதியான நடவடிக்கைகளை எப்போதும் எடுத்து வருகிறது. அதனால் தான் இந்தியாவிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பு இருக்கும் மாநிலங்களில் தமிழ்நாடு முன்னிலையில் இருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் கீதா ஜீவன், தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

## முகையூர் வடக்கு, முகையூர் தெற்கு ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகள் !

### திருத்தம்

### தலைமைக் கழக அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் ஏற்கனவே வெளியிடப்பட்ட விழுப்புரம் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் செய்யப்படுகிறது.

விழுப்புரம் தெற்கு மாவட்டம், முகையூர் வடக்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **முகையூர்** ஊராட்சி **முகையூர் தெற்கு ஒன்றியக் கழகத்தின்** கீழும்;

முகையூர் தெற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **புத்தூர், கொல்லூர்** ஆகிய 2 ஊராட்சிகள் **முகையூர் வடக்கு ஒன்றியக் கழகத்தின்** கீழும் செயல்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

## விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியம், மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் வேட்புமனு தாக்கல்!

### தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விருதுநகர் தெற்குமாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியத்தின் மாவட்ட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ரா.அப்பணசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டைதெற்கு ஒன்றியம் மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, நவம்பர் 28 (வியாழக் கிழமை)அன்று ரூ.1000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தகுதிவிவரம்**

ஒன்றியக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்பு மனுக்களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த ஒன்றியத்திற்கு கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைச் செயலாளராகவோ, பேரூர்ச் செயலாளராகவோ, ஒன்றியப் பிரதிநிதியாகவோ இருத்தல வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்திபெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; அரசியலமைப்பு தினத்தையொட்டி வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தில், "நீதி, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகிய அரசியலமைப்புக் கொள்கைகளில் உறுதியாக இருக்கும் நாம்" என்று, ஒன்றிய பா.ஜ.க. அரசு குறிப்பிட்டுள்ளதே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; "சமத்துவம் இல்லையேல் சுதந்திரம் இல்லை; சகோதரத்துவம் இல்லையேல் சமத்துவமோ,சுதந்திரமோ இல்லை" என்பது அண்ணல் அம்பேத்கரின் அடிப்படைக் கொள்கை.**

**உலக ஏற்றத் தாழ்வு அறிக்கையின்படி, இந்தியாவில் 2023ல், நாட்டின் மேல்தட்டு 10 சதவீத மக்கள், நாட்டின் மொத்த செல்வத்தில் 65 சதவீதத்தையும், மொத்த வருமானத்தில் 58 சதவீதத்தையும் கைப்பற்றி உள்ளனர். மாறாக, கீழ்த்தட்டு மக்கள் வெறும் 6.5 சதவீத செல்வத்தையும், 15 சதவீத வருமானத்தையும் மட்டுமே பெறுகின்றனர்.**

**இந்த நிலையில் இந்தியாவில் எங்கே இருக்கிறது சமத்துவம்? சுதந்திரமும், சகோதரத்துவமும் எங்கே ? மத வெறியையும், வெறுப்பையும், வேறுபாடுகளையும் ஒன்றிய பா.ஜ.க. அரசே தூண்டிவிடுகிறதே! ஏட்டுச் சுரைக்காயாக மதிக்கப்படும் இலட்சியங்கள், ஏழைகளின் ஏக்கத்தைப் போக்குமா ? "எளியோரைத் தாழ்த்தி, வலியோரை வாழ்த்தும்" ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியின் ஆர்ப்பாட்ட விளம்பரங்கள், யாருக்கும் பயன்படாது!**

### துணை முதல்வர் பிறந்த நாள்; எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில்

# சைதை மேற்கில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி . - மு.மகேஷ்குமார் - பரிதி இளம்சுருதி பங்கேற்பு!

சென்னை, நவ. 27-

பகுதி செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., தலைமையில் சைதை மேற்கு பகுதியில் கழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு 1000 பேருக்கு அறுசுவை உணவினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்! இதில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, துணை மேயர் மு.மகேஷ்குமார், பரிதி இளம்சுருதி எம்.சி., பங்கேற்கின்றனர்.

நவம்பர் 27 மனிதநேய உதய நாள் கழக இளைஞர் அணி செயலாளரும் தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்குபகுதி தி.மு.க. சார்பில் 27.11.2024 (புதன்கிழமை) நண்பகல் 12 மணியளவில் சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் உள்ள சைதை மேற்கு பகுதி கழக அலுவலகத்தில் பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும், சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டல குழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் முன்னிலையிலும், பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன், பகுதி துணைசெயலாளர்கள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன், வட்டகழக செயலாளர்கள் எம்.நாகா, எஸ்.பி.கோதண்டம், சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன் ஆகியோர் வரவேற்பில் 1000 பேருக்கு அறுசுவை உணவினை மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வழங்குகிறார். இந்நிகழ்வில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், தொகுதி பொறுப்பாளர் பரிதி இளம்சுருதி எம்.சி., ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மேலும் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், மின்னல்கந்தப்பன், த.மோகன்குமார் எம்.சி., மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், எம்.எஸ்.ஹரிபாபு, அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, கிண்டி செல்வம், ஜி.கே.ராமச்சந்திரன், வீ. மதிவாணன், பொன்ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார்ரவி, ஜி.பாபு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.எஸ்.பழனி, எம்.எஸ்.மணி, ஏ.சந்தோஷ், டி.எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்பந்தம், கு.கார்த்திகேயன், மாவுமில் ஸ்ரீதர், டி.ராஜ்குமார், த.மணி, திடீர்நகர் தாஸ், என்.தீனதயாளன், அ.தமீம்அன்சாரி, ஏ.புரு ஷோத்தமன், ச.தினகரன், ஆர்ட்ஸ்குமார், எம்.மாறன், கே.பிரபு, பிரஸ்கார்த்திக், வெ. கிஷோர்குமார், துரைராஜ், சிற்றரசு, நரேஷ்குமார், ரவீந்திரகுமார், ஆர்.ஜி.ஸ்டாலின், எம்.ஜி.மதிவாணன், ஸ்டெல்லாமேரி, செல்வி, ஜி.ராஜேஸ்வரி, செண்பகம், சுந்தரி, செல்வராணி, இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம்பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா,

இரா.வெங்கடேசன் பகுதி அமைப்பாளர்கள் ஆர்.எஸ்.ரமேஷ், ஜி.ஜே.மோசஸ், ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, கோயில்மணி, ஆட்டோஜான், ஆர்.தனசேகரன், சார்ப்சரவணன், பைரவமூர்த்தி, இரா.பாபு, பிடிசி.குமார், பூ.பாஸ்கர், த.ஜெயராமன், எஸ்.வினோத்குமார், வழக்கறிஞர் மாரியப்பன், வட்டகழக நிர்வாகிகள் ஆர்பார்முனுசாமி, எப்.சாகுல்அமீது, கேபிள்முருகன், எம்.கதிர், ஆர்.கோபி, கே.முருகேசன், வி.பி.காந்தி, கே.கசாலி, ஆர்.மோகன், கே.விஜய், எம்.சேக்தாவூத், கே.சி.பழனிபாரதி, ஆர்.எல்.காந்தன்,

பி.தேவிகா, எம்.பாலாஜி, ஆம்பூர்ரவி, பி.வரதன், பாரதி பாஸ்கர், வே.பிரபு, மு.கதிரவன், பொ.பரத்குமார், எஸ்.முருகன், சாந்திசுந்தரம், அயாத்பாஷா, சுப்பிரமணி, காசிநாதன், சபரி, முரளி, சந்திரன், இ.வரதன், மா.ஏழுமலை, எஸ்.பிரகாஷ், சுமதி, பூபதிவெங்க டேசன், ஜி.ஏழுமலை, கொடிசுரேஷ், கோபாலகிருஷ்ணன், முகமது அலி, ராஜேஷ், பிரஸ்மணி, லால் மனோகர், எஸ்.ஆனந்தன், வளர்மதி, வீரமணி, கவிராஜ், அய்யாவு, பன்னீர்செல்வம், ஞானம், பாண்டுரங்கன், மனோகரன், ஆர்.ஜெகநாதன், தென்றல்தினேஷ், கௌரி, எஸ்.பஷீர், சரவணன், கமல்சங்கர், துளசி, விஜயகுமார் உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்கு சிறப்பிக்கின்றனர்.



மாதவரம் வடக்கு பகுதி 19 ஆவது வட்டம் மாத்தூர் பகுதியில் நடைபெற்ற வாக்காளர் சேர்த்தல், நீக்கல் சிறப்பு முகாமில், சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம் எல் ஏ மற்றும் தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெ. அருண் ஆகியோர் அறிவுறுத்தலின்படி, 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் முன்னிலையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வாக்குச்சாவடி முகாம்களுக்கு நேரடியாக சென்று, பொதுமக்களுக்கு உதவி செய்யும் வகையில் நிர்வாகிகள் மற்றும் பாகமுவர்களுக்கு அறிவுறுத்தி பணிகளை துரிதப்படுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.